**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.**

**STC. No. 1392 of 2022**

**மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பரணிராஜ் | **தொழில்** | |
| **த/பெ(அ) க/பெ.** | | **வயது** | |
| **கிராமம்** | | | |
| **தாலூக்கா** | | | |

நாள்: 06.08.2025

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

காசோலையில் உள்ள அனைத்து விவரங்களையும், பெயர் உட்பட எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வழக்கு காசோலையை நான் எந்த வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் TMB கிளையில் நான் தான் தாக்கல் செய்தேன். Collection Slip நான் தான் எழுதி போட்டேன் என்றால் சரிதான். ம.த.சா.ஆ 2 Collection Slip என்றால் சரிதான். ம.த.சா.ஆ 1 மற்றும் ம.த.சா.ஆ 2 உள்ள கையெழுத்துக்கள் ஒரே மாதிரி தான் உள்ளது என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களில் ஒரே நபரால், ஒரே சமயத்தில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ 1 உள்ள ரூ.8 லட்சமும், ம.த.சா.ஆ 2 உள்ள ரூ.8 லட்சமும் ஒரே அமைப்பில் உள்ளன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணங்களில் onlyல் காணப்படும் Y ஒன்றுபோல் உள்ளதா என்றால் இல்லை. அதே போல், காசோலை மற்றும் Collection Slipல் உள்ள தேதிகள் மற்றும் பெயர்கள் ஒன்று போல் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு காசோலையையும், Collection Slipயும் தடவியல் ஆய்வு அறிக்கைக்கு அனுப்ப ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. வழக்கு காசோலையில் உள்ள மையும், Collection Slipல் உள்ள மையும் ஒரே பேனாவால் எழுதப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில்

உள்ள அனைத்து வாசகங்களும் என்னால் எழுதப்பட்டவை என்றாலும், வழக்குகாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது என்றால் தெரியவில்லை. என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்ற காரணத்தை தெரிந்துக்கொள்ள முயற்சித்தீரா என்றால் Other Reason என திருப்பப்பட்டது. வங்கியில் எதனால் குறிப்பிட்டு தரவில்லை என்றால் திருப்பப்பட்டுவிட்டது என்று தான் சொன்னார்கள். எதிரியின் வங்கியில் போதிய பணம் இருந்தது என்றும், காசோலை Defect என்பதால் தான் திரும்பிற்று என்றால் சரியல்ல. ரூ.8 லட்சம் மெஷின் வாங்குவதற்காக எந்த உரிமையாளரிடமிருந்து வாங்கி வைத்திருந்தேன் என்றால் நான் யாரிடமும் வாங்கவில்லை. நான் என்னிடம் மெஷின் வாங்குவதற்காக வைத்திருந்தேன். நான் மெஷின் வாங்குவதற்காக பணம் வைத்திருந்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாலசுப்பிரமணியம் என்கின்ற வெங்கடேஷை தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எதற்காக ரூ.8 லட்சம் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் சொந்த காரணங்களுக்காக வாங்கினார். என்ன காரணம் என்று குறிப்பிட்டு கூறவில்லை. எதிரி பணம் வாங்கியதாக சொல்லும் 6 மாதத்திற்கு முன்பே, எதிரி உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, ஓய்வுக்காக வீட்டில் இருந்தார் என்றாலும், அவர் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த பணமும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு பொய் வழக்கு, தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. எனக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. வசதி உண்டு.

**Sd/- Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**